மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்

வத்திராயிருப்பு

சிசி. எண். 204/2024

அ.சா.2 - சிவா

தேதி -10.07.2025

**எதிரி ஆஜர்**

**<u>சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை : –</u>**

விபத்து நடந்த சம்பவத்தில் நான் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படித்து வந்தேன் என்றால் சரிதான். விபத்தில் இறந்து போன அபி கணேஷ் என்னைவிட மூன்று வயது இளையவர் என்றால் சரிதான். நானும் அபி கணேசனும் உறவினர்கள் என்றால் சரிதான். கூமாப்பட்டியில் மருத்துவமனை மற்றும் மருந்து கடைகள் உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த சம்பவத்தில் நான் எனது நண்பர் ஈஸ்வரன் பைக்கில் தான் வத்திராயிருப்பிற்கு வந்தேன் என்றால் சரிதான். எனக்கு இருசக்கர வாகனமோ ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான். 16.02.2022 அன்று பால்சாமி என்பவரின் காட்டை தாண்டி தான் மேற்கிலிருந்து கிழக்காக வத்திராயிருப்பிற்கு வரவேண்டும் என்றால் சரிதான். கூமாப்பட்டிக்கும் வத்திராயிருப்பிற்கும் ஐந்து கிலோமீட்டர் இடைவெளி இருக்கும் என்றால் சரிதான். சாலையின் இரண்டு பக்கமும் வயல்கள் உள்ளன என்றால் சரிதான். கூமாபட்டியில் இருந்து வத்திராயிருப்பிற்கு வருவதற்கும் செல்வதற்கும் அந்த ஒரு பாதை தான் உள்ளது என்றால் சரிதான். அந்த பாதை வழியாகத்தான் வழக்கமாக வாகனங்கள் சென்று வரும் என்றால் சரிதான். என்னுடைய போலீஸ் விசாரணையில் வத்திராயிருப்பிற்கு வந்து எந்த மருந்து கடையில் மருந்து வாங்கினேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். தலைக்கவசம் இல்லாமலும் ஓட்டுனர் உரிமம் இல்லாமலும் வாகனத்தை இயக்கக் கூடாது என்ற

விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். விபத்து நடந்ததாக சொல்லப்படும் சாலை குறுகியது மற்றும் வளைந்து செல்லக்கூடியது என்றால் சரிதான். விபத்து நடந்த உடன் அபி கணேசனின் தகப்பனாருக்கு மட்டும்தான் ஃபோனில் தகவல் சொன்னேன் என்றால் சரிதான். விபத்து நடந்தவுடன் 108 ஆம்புலன்ஸ் இருக்கு யார் தகவல் சொன்னார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் கொடுத்த விபரத்தையும் நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்திருக்கும் இடத்திற்கும் அரசு மருத்துவமனைக்கும் சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்கும் வத்திராயிருப்பு காவல் நிலையத்திற்கும் 100 மீட்டர் தூரம் தான் இருக்கும் என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் நான் வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்கு வந்தேன் என்றும் அங்கே வைத்து போலீசார்கள் என்னை விசாரித்தார்கள் என்றும் சொன்னால் சரிதான். அன்றைய தினம் நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். புகார் கொடுத்ததாக வழக்கில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தில் எனக்கும் காயம் ஏற்பட்டது என்றும் அதற்கு நான் வெளி நோயாளியாக அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டேன் என்றும் சொன்னால் சரிதான். மறுநாள் 14.06.2022 ம் தேதி மாலை எனது அம்மாவுடன் வந்து வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றால் சரிதான். அன்றைய தினம் மருத்துவர்கள் சம்பவம் குறித்து விசாரித்து விபத்து பதிவேட்டில் குறிப்பு எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான். 13.06.2022 ம் தேதி அபிகணேசன் மருத்துவமனைக்கு வந்த பொழுது மருத்துவர்கள் அவரை விசாரித்து குறிப்பு எடுத்துக் கொண்டார்கள் என்றால் இல்லை. மருத்துவர்கள் விபத்து பதிவேட்டில் சாராய வாடை வீசுவதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும் அபி கணேசனும் மருத்துவரிடம் தன்னிச்சையாக விழுந்து விட்டதாக கூறினோம்

என்றால் சரியல்ல. போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து இரண்டு முறை விசாரித்தார்கள். அபி கணேஷை போலீசார் விசாரிக்கவில்லை என்னை மட்டும் தான் விசாரித்தார்கள். அபி கணேஷை போலீசார் விசாரிக்கும் போது நான் உடன் இருந்தேன் என்றால் இல்லை. என்னை போலீசார் விசாரணை செய்யும் பொழுது அபி கணேஷ் உடன் இருந்தாரா என்றால் இல்லை. அபி கணேஷ் தகப்பனார் கொடுத்த புகார் எப்போது கொடுக்கப்பட்டது என்றும் அந்த புகாரில் என்ன எழுதி உள்ளது என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் சொல்லித்தான் எனக்கு கருப்பையா என்பவரை தெரியும் என்றால் சரிதான். விபத்து நடந்த சம்பவத்தில் எனது ஊரில் மதுபான கடையோ மனமகிழ் மன்றமோ கிடையாது என்றால் சரிதான். நானும் அபி கணேசனும் மது அருந்துவிட்டு கூடுதலாக மது அருந்துவதற்காக வத்திராயிருப்பு வந்து மது குடித்துவிட்டு திரும்ப செல்லும் பொழுது இருசக்கர வாகனத்தினை அஜாக்கிரதையாகவும் அதிவேகமாகவும் போட்டி விபத்தை ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. எனக்கும் அபி கணேசனுக்கும் ஏற்பட்ட காயம் தன்னிச்சையாக விழுந்து ஏற்பட்ட காயம் என்றால் சரியல்ல. அபி கணேசன் மதுபோதையில் இருசக்கர வாகனத்தை ஓட்டியதை மறைப்பதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : –** இல்லை .

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

வத்திராயிருப்பு